# THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI

## MOST REV. ALBERT G.A. ANASTHAS D.D., S.T.D.

Bishop of Kuzhithurai

✆ : 04651 272077

☐ : 9442451130

Bishop's House, Post Box No. 1, Unnamalaikadai - 629179, Kanyakumari District, Tamilnadu, India.


CH/BP/L - 154/2025 ஆகஸ்ட் 16, 2025

அன்பார்ந்த அருட்தந்தையரே, அருட்சகோதரிகளே, இறைமக்களே!

“நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும், அமைதியும் உரித்தாகுக!” (உரோமையர் 1:1).

நமது குழித்துறை மறைமாவட்டப் பங்குகளில் நடைபெறும் திருமுழுக்கு, முதல் திருவிருந்து ஆகிய அருளடையாளக் கொண்டாட்டங்கள் மற்றும் திருவிழாக் காலங்களில் பங்குகளில் திரையிசைப் பாடல்கள் தவிர்த்தல் ஆகியவற்றைக் குறித்த வழிகாட்டலையும் இக்கடிதம் வழியாக வழங்குகின்றேன். எல்லாப் பங்குகள் மற்றும் கிளைப்பங்குகளிலும் இந்த ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி அருள்வாழ்வைக் கொண்டாடக் கேட்டுக்கொள்கிறேன்.

1) நமது பங்குகளில் நடைபெறும் எல்லா அருளடையாளக் கொண்டாட்டங்களும் சமூகக் கொண்டாட்டங்களாக அமைய வேண்டும். தனி மனிதக் கொண்டாட்டமாகவோ, ஒரு குடும்பத்தின் கொண்டாட்டமாகவோ அமைந்துவிடக்கூடாது.

2) முதல் திருவிருந்துக்குத் தயாரிக்கப்படும் சிறார் பத்து வயது நிரம்பியவர்களாக அல்லது குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்புப் படிப்பவர்களாக இருக்க வேண்டும்.

3) முதல் திருவிருந்து சிறப்பு மறைக்கல்வி வகுப்புகள் வழியாக குறைந்தது ஒரு மாதம் சிறார் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இத்தயாரிப்பு திருவிழாவுக்கு முந்தைய காலங்களிலோ, கோடை விடுமுறை காலங்களிலோ அமையலாம்.

4) திருமுழுக்கும், முதல் திருவிருந்தும் அவரவர் பங்குகளில் கொண்டாடப்படுவதே சிறப்பு. தவிர்க்க இயலாத காரணங்களை முன்னிட்டு இவ்வருளடையாளங்கள் தனிப்பட்ட விதத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமெனில் பங்குத்தந்தையரின் கடிதத்தோடு நட்டாலம், வெட்டுவெந்நி, புலியூர்குறிச்சி, சுங்கான்கடை ஆகிய நான்கு திருத்தலங்கள் மற்றும் முளகுமூடு புனித மரியன்னை பசிலிக்கா ஆகியவற்றின் அதிபர்களையோ, மேலும் திரித்துவபுரம் பேராலயப் பங்குத்தந்தையையோ தொடர்புகொண்டு திருமுழுக்கு, முதல் திருவிருந்துத் திருப்பலிகளை நிறைவேற்றலாம். பங்குத்தந்தையரின் உரியக் கடிதமின்றி ஏனைய பங்கு உறுப்பினர்களுக்கு அருளடையாளக் கொண்டாட்டங்களுக்கான அனுமதிகளை திருத்தல/பசிலிக்கா அதிபர்கள் மற்றும் திரித்துவபுரம் பேராலயப் பங்குத்தந்தை வழங்கக் கூடாது.

5) திருமுழுக்கு மற்றும் முதல் திருவிருந்து அருளடையாளக் கொண்டாட்டங்கள் நடைபெறும் பங்குகள் அல்லது திருத்தலங்களின் பதிவேடுகளில் மட்டுமே அவ்வருளடையாளக் குறிப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு பங்கு அல்லது திருத்தலத்தில் நடைபெறும் அருளடையாளக் கொண்டாட்டங்களுக்கானப் பதிவுகளை மற்றொரு பங்கில் பதிவு செய்தல் கூடாது.

6) ஒவ்வொரு பங்கு மற்றும் கிளைப்பங்கிலும் வாரத்திற்கு ஒரு நாளினை நிர்ணயம் செய்து திருமுழுக்கு வழங்க வேண்டும். இதுபற்றிய கலந்துரையாடல் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் மேற்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றி அதனை ஆலயத்தில் ஞாயிறு திருப்பலியின் நிறைவில் அறிவிப்பு நேரத்தில் இறைமக்களுக்கு அறிவிக்க வேண்டும். தனிநபரின் வசதிக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட நாளினையும், நேரத்தையும் மாற்றக்கூடாது.


✉ : albertgeo@gmail.com * rcdiocesekuzhithurai@gmail.com 🌐 : www.kuzhithuraidiocese.com

# THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI

**MOST REV. ALBERT G.A. ANASTHAS D.D., S.T.D.**

**Bishop of Kuzhithurai**

: 04651 272077

: 9442451130

Bishop's House, Post Box No. 1, Unnamalaikadai - 629179, Kanyakumari District, Tamilnadu, India.


7) பங்கு மற்றும் கிளைப்பங்குகளில் எக்காரணத்தை முன்னிட்டும் வழக்கமாக நடைபெறும் நாள் மற்றும் நேரத்தைத் தவிர இதர நாள் மற்றும் நேரங்களில் திருமுழுக்குக் கொண்டாட்டங்களை நிறைவேற்ற அனுமதி இல்லை.

8) மக்களின் வசதிக்கேற்ப முதல் திருவிருந்துத் திருப்பலிகளை ஆண்டுக்கு ஒரு முறை பங்குத் திருவிழாவின்போது அல்லது மூன்று முறைகள் (திருவிழா, கிறிஸ்து பிறப்பு விழா, மே மாத விடுமுறை) வரை பங்குகளில் நிறைவேற்றலாம். இதற்கான சிறப்பு வகுப்புகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மட்டுமே முதல் திருவிருந்து வழங்க வேண்டும். இச்சூழலில் வருடத்திற்கு ஒருமுறை சிறப்புப் பயிற்சி என்பதை வருடத்திற்கு இருமுறை அல்லது மூன்று முறை ஏற்பாடு செய்ய வேண்டியது பங்குத்தந்தையரின் கடமை ஆகும். மேலும், ஒரு சிறுவர் ஒருமுறை பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்றிருந்தால் அவர் தனது குடும்பத்தின் சூழ்நிலைக்கேற்ப அந்த வருடத்திலோ, தொடர்ந்துவரும் வருடங்களிலோ முதல் திருவிருந்து பெற அனுமதிக்கப்பட வேண்டும்.

9) முதல் திருவிருந்துக்காகத் தயாரிக்கப்பட்ட சிறார் ஏதேனும் சிறப்புக் காரணங்களுக்காக அவரவர் பங்கில் முதல் திருவிருந்து பெறவில்லையெனில், அருகாமையிலுள்ள பங்குகளில் முதல் திருவிருந்து நடைபெறும் வழக்கமான நேரங்களில், பங்குத்தந்தையரின் கடிதத்தோடு முதல் திருவிருந்துக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

10) திருமணத்துக்காகத் தங்களைத் தயாரிக்கும் கிறிஸ்தவரல்லாத இளையோர் மற்றும் பெரியவர்கள் (Adults) திருமுழுக்கு பெறுவதற்குத் தங்களை தயாரிக்கையில் அவர்களுக்கு புகுமுக அருளடையாளங்களான திருமுழுக்கு, முதல் திருவிருந்து, உறுதிப்பூசுதல் ஆகிய மூன்று அருளடையாளங்களையும் சேர்த்து வழங்க வேண்டும். எனவே, பங்குத்தந்தை அத்தகைய இளையோர் அல்லது பெரியவர்களின் வசதிக்கேற்ப எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் வாரத் திருப்பலியின்போது இதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

11) பங்குகளில் பாதுகாவலர் திருவிழாக் கொண்டாட்டங்களின்போது திரைப்பட இன்னிசை நிகழ்ச்சி, திரைப்படப் பாடல்கள் மற்றும் திரைப்பட மெட்டிலான பாடல்களுக்கு நடனமாடுவது ஆகியவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். இதனை மீறும் பங்குகளில் மறைமாவட்ட ஆயர், வேறு ஆயர்கள், மறைமாவட்ட நிர்வாக அருள்பணியாளர்கள் மற்றும் வட்டார முதன்மை அருள்பணியாளர்கள் திருவிழா நாட்களில் பங்கேற்கமாட்டார்கள்.

**கிறிஸ்துவில் அன்புள்ள,**

+ G. Albert

**மேதகு ஆயர் ஆல்பர்ட் G. A. அனஸ்தாஸ்,**
**குழித்துறை மறைமாவட்டம்.**

MOST REV. ALBERT G.A. ANASTHAS ★ BISHOP OF KUZHITHURAI ★

**குறிப்பு:** இந்த வழிகாட்டல் கடிதம் ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 24, 2025 திருப்பலியின் நிறைவில் குழித்துறை மறைமாவட்டத்தில் எல்லாப் பங்குகளிலும், கிளைப்பங்குகளிலும் வாசிக்கப்பட வேண்டும். செப்டம்பர் 01, 2025-லிருந்து எல்லாப் பங்கு மற்றும் கிளைப்பங்குகளிலும் இவ்வழிகாட்டலை நடைமுறைப்படுத்த வேண்டும்.


: albertgeo@gmail.com * rcdiocesekuzhithurai@gmail.com : www.kuzhithuraidiocese.com